TNPTF

பதிவு எண்.60/2009

# தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

மாநில அமைப்பு

மாநில அலுவலகம்: 41, முக்தாருன்னிசா பேகம் தெரு, எல்லீஸ் சாலை, சென்னை - 600 002

**TAMIL NADU PRIMARY SCHOOL TEACHERS' FEDERATION**

Office : 41, Muktharunnisha Begum Street, Ellis Road, Chennai - 600 002, Ph:044-48581553 Email : tnptfithal@gmail.com

| மூ.மணிமேகலை | ச.மயில் | J.மத்தேயு |
|---|---|---|
| மாநிலத்தலைவர் | பொதுச்செயலாளர் | மாநிலப் பொருளாளர் |
| 74020 32686 | 94428 13953 | 94447 31747 |


## ஊடகச் செய்தி

**மாநில அமைப்பின் செய்தியறிக்கை எண்: 15/2023, நாள்: 11.12.2023**

## இரண்டாம் பருவத் தேர்வில் 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாநில அளவிலான பொது வினாத்தாள்! தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் செயல் என்பதால் பள்ளிகள் அளவில் தேர்வு நடத்த உத்தரவிடக்கோரி ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி முதலமைச்சருக்கு மனு.

2023-2024ஆம் கல்வியாண்டில் இரண்டாம் பருவத் தேர்வு 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாநில அளவில் பொது வினாத்தாளைப் பின்பற்றி தேர்வு நடத்த பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளதை மாற்றி முன்பு போல் பள்ளிகள் அளவில் வினாத்தாள் தயாரித்து தேர்வு நடத்த உத்திரவிட வேண்டுமென தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச்செயலாளர் ச.மயில் முதலமைச்சருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் ஆகியோரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண்: 2411/எப்2/2021 நாள்: 12.2023 உத்தரவில் 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கு இரண்டாம் பருவத்திற்கான தேர்வுகள் 1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 15.12.2023 முதல் நடத்திடவும், 4, 5ஆம் வகுப்புகளுக்கான தேர்வுகள் 12.12.2023 முதல் நடத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான இரண்டாம் பருவத்தேர்விற்கான வினாத்தாட்கள் **PDF** வடிவில் https://exam.tnschools.gov.in என்ற இணைய முகவரியில் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் **RC.No.3375/A4/Assesment/SS/2023** நாள்:16.11.2023ன் படி 6 முதல் 8 வகுப்புகளுக்கும் மாநில அளவில் பொது வினாத்தாளைப் பின்பற்றி தேர்வு நடத்த ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்டவாறு தேர்வு நடத்த 1 முதல் 8 வகுப்புகளுக்கான வினாத்தாட்களை அந்தந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தேர்விற்கு முதல் நாள் பதிவிறக்கம் செய்து, அவற்றை மாணவர்களின் நான்கு வகையான கற்றல் நிலைகளுக்கு ஏற்ப போதிய அளவில் நகலெடுத்து மிகவும் பாதுகாப்பாக மந்தனத்தன்மையுடன் இரும்பு அலமாரியில் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறான நடைமுறைகள் என்பது 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொது தேர்வுகளுக்கான நடைமுறை போன்று உள்ளது. “தேசிய கல்விக் கொள்கை - 2020ஐ ஏற்க மாட்டோம்” என்பதில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து மாநில கல்விக் கொள்கையை உருவாக்க தனியாகக் குழுவை அமைத்துள்ள தமிழ்நாடு அரசின் சிறப்பான நடவடிக்கைக்கு நேர் எதிரான நடவடிக்கையாக 1 முதல் 8 வகுப்புகளுக்கு மாநில அளவில் ஒரே தேர்வு என்ற நடைமுறை உள்ளது.

தேசிய கல்விக் கொள்கை 2020ல் 3, 5, 8 ஆகிய வகுப்புக்களுக்கு பொதுத்தேர்வு நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. 3, 5, 8 வகுப்புக்களுக்கு பொதுத்தேர்வு என்பது இளம் சிறார்களின் நெஞ்சங்களில் தேர்வு பயத்தையும், உளவியல் ரீதியாகக் குழந்தைகளின் மனநிலையைப் பாதிப்பதாகவும், குழந்தைகளின் இடைநிற்றலை (Drop out) அதிகரிக்கும் செயலாகவும் அமையும் என்பதால் கல்வியாளர்களும், உளவியல் நிபுணர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட சூழலில் தேசிய கல்விக் கொள்கை - 2020ஐ தமிழ்நாடு அரசு ஏற்காத நிலையில் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை 1 முதல் 8 வகுப்புக்களுக்கு மாநில அளவில் ஒரே தேர்வை நடத்துவது என்பது முரண்பாடாக உள்ளது. மேலும், தேசிய கல்விக் கொள்கை - 2020ன் கூறுகளை தமிழ்நாட்டில் வேகமாக அமல்படுத்துவதாகவும் உள்ளது. 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஏதோ NEET, SLET, NET போன்ற தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளை நடத்துவதைப் போல விதிமுறைகளை அறிவிப்பது என்பது எவ்விதத்திலும் பொருத்தமானதாக இல்லை. உலகில் கல்வியில் முன்னேறிய எந்தவொரு நாட்டிலும் 1 முதல் 8 வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு பொதுத்தேர்வு அல்லது மாநில அளவிலான தேர்வு என்ற நடைமுறை இல்லை.

கல்வி என்பது குழந்தைகள் சுதந்திரமாகக் கற்பதையும், சுதந்திரமாகச் சிந்திப்பதையும் உறுதிப்படுத்துவதோடு, குழந்தையை மையமாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். தேர்வை மையப்படுத்தி குழந்தைகளின் கல்வி அமையக்கூடாது என்பதை புகழ்பெற்ற கல்வியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். எனவே, தாங்கள் இவ்விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு 2023-2024 ஆம் கல்வியாண்டில் இரண்டாம் பருவத்தேர்வில் 1 முதல் 8ஆம் வகுப்புக்கு மாநில அளவில் தேர்வு என்ற நடைமுறையை ரத்து செய்திடவும், கடந்த காலங்களில் தமிழ்நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டவாறு 1 முதல் 8 வகுப்புக்களுக்கு பள்ளிகள் அளவில் ஆசிரியர்களே வினாத்தாட்களைத் தயாரித்து தேர்வு எழுதும் நடைமுறையை மீண்டும் செயல்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவிட தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில அமைப்பின் சார்பில் தங்களை வேண்டுகிறோம்.

மேலும், 1 முதல் 5ஆம் வகுப்புகளுக்கான இரண்டாம் பருவத் தேர்வுக்கான பொது வினாத்தாட்களை ஆரம்பப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஒவ்வொரு தேர்வுக்கு முந்தைய நாளும் அருகில் உள்ள நடுநிலைப் பள்ளிகளுக்குச் சென்று அங்குள்ள கணினியில் பதிவிறக்கம் செய்து நகலெடுக்க வேண்டும் என்று கல்வித்துறை அலுவலர்கள் வாய்மொழியாக அல்லது சமூக வலைத்தளங்கள் வழியாக தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவித்து வரும் செய்திகள் எவ்விதத்திலும் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகும்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் சராசரியாக 100 ஆரம்பப்பள்ளிகளும், 10 நடுநிலைப் பள்ளிகளும் உள்ளன. 10 ஆரம்பப்பள்ளிகளுக்கு வினாத்தாட்களை ஒரே நேரத்தில் பதிவிறக்கம் செய்து நகலெடுத்துக்கொடுக்கும் வசதி நடுநிலைப் பள்ளிகளில் இல்லை.

நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகள், பிரிண்டர்கள் அந்த அளவுக்கு தகுதி வாய்ந்தவைகளாகவும் இல்லை. மேலும், 10 பள்ளிகளுக்கு வினாத்தாட்களை நகலெடுத்துக் கொடுக்க ஆகும் செலவை யார் தருவது என்ற கேள்விக்கும் விடை இல்லை. மொத்தத்தில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை மாநில அளவிலான தேர்வு என்பது பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 2014ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் தொடக்கக்கல்வித்துறையில் ஆசிரியர் நியமனமே இல்லாத சூழலில், ஆயிரக்கணக்கான ஆரம்பப்பள்ளிகளில் ஓராசிரியர் மட்டுமே பணியாற்றும் சூழலில், 1 முதல் 5 வகுப்புக்களுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் என்பது ஆசிரியர்கள் மத்தியில் மிகப்பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 1 முதல் 8 வகுப்புகளுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் என்று அறிவித்துள்ள பள்ளிக்கல்வித்துறை அந்த வினாத்தாட்களை அச்சிட்டுப் பள்ளிகளுக்கு வாழங்கிட ஏன் முன் வரவில்லை என்ற கேள்வியும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் எழுந்துள்ளது. கல்வி உரிமை சட்டம் - 2009ன் படி 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை “அனைவரும் தேர்ச்சி” என்று உள்ள நிலையில் 1 முதல் 8 வகுப்புக்களுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் மூலம் தேர்வு என்பது அவசியமற்றதாகும்.

எனவே, தாங்கள் 1 முதல் 8 வகுப்புக்களுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் என்பதை ரத்து செய்திடவும் பள்ளிக்கல்வித்துறை தேசிய கல்விக் கொள்கை - 2020ஐ பின்பற்றி தேர்வு நடத்துவதைத் தடுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவிட வேண்டுமாய் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில அமைப்பின் சார்பில் வேண்டுகிறோம்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இப்படிக்கு,

(ச.மயில்)
பொதுச்செயலாளர்

சென்னை
11.12.2023

இணைப்பு:
முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட மனு.

TNPTF

வளர்க கல்வி

பதிவு எண்.60/2009

# தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

மாநில அமைப்பு

மாநில அலுவலகம்: 41, முக்தாருன்னிசா பேகம் தெரு, எல்லீஸ் சாலை, சென்னை - 600 002

TAMIL NADU PRIMARY SCHOOL TEACHERS' FEDERATION

Office : 41, Muktharunnisha Begum Street, Ellis Road, Chennai - 600 002, Ph:044-48581553 Email : tnptfithal@gmail.com

| மு.மணிமேகலை | ச.மயில் | J.மத்தேயு |
|---|---|---|
| மாநிலத்தலைவர் | பொதுச்செயலாளர் | மாநிலப் பொருளாளர் |
| 74020 32686 | 94428 13953 | 94447 31747 |


பெறுநர்

மாண்புமிகு.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
தலைமைச் செயலகம்
சென்னை - 9

மாண்புமிகு ஐயா, வணக்கம்.

பொருள் : தொடக்கக்கல்வி - 2023-2024 ஆம் கல்வியாண்டு - இரண்டாவது பருவத்தேர்வு நடத்துதல் - தேசிய கல்விக் கொள்கை 2020ஐ பின்பற்றி 1 முதல் 8 வகுப்புக்களுக்கு மாநில அளவிலான பொது வினாத்தாள் கொண்டு தேர்வு நடத்துவதைக் கைவிட்டு கடந்த காலங்களைப் போல் அந்தந்தப் பள்ளி அளவில் வினாத்தாள் தயாரித்து தேர்வு நடத்த ஆவண செய்திட வேண்டுதல் சார்பாக.

பார்வை : தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண்: 2411/எப்2/2021 நாள்: .12.2023.

*************

பார்வையில் காணும் உத்தரவில் 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கு இரண்டாம் பருவத்திற்கான தேர்வுகள் 1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 15.12.2023 முதல் நடத்திடவும், 4, 5ஆம் வகுப்புகளுக்கான தேர்வுகள் 12.12.2023 முதல் நடத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான இரண்டாம் பருவத்தேர்விற்கான வினாத்தாட்கள் **PDF** வடிவில் https://exam.tnschools.gov.in என்ற இணைய முகவரியில் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் **RC.No.3375/A4/Assesment/SS/2023** நாள்:16.11.2023ன் படி 6 முதல் 8 வகுப்புகளுக்கும் மாநில அளவில் பொது வினாத்தாளைப் பின்பற்றி தேர்வு நடத்த ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்டவாறு தேர்வு நடத்த 1 முதல் 8 வகுப்புகளுக்கான வினாத்தாட்களை அந்தந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தேர்விற்கு முதல் நாள் பதிவிறக்கம் செய்து, அவற்றை மாணவர்களின் நான்கு வகையான கற்றல் நிலைகளுக்கு ஏற்ப போதிய அளவில் நகலெடுத்து மிகவும் பாதுகாப்பாக மந்தனத்தன்மையுடன் இரும்பு அலமாரியில் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறான நடைமுறைகள் என்பது 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொது தேர்வுகளுக்கான நடைமுறை போன்று உள்ளது. "தேசிய கல்விக் கொள்கை - 2020ஐ ஏற்க மாட்டோம்" என்பதில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து மாநில கல்விக் கொள்கையை உருவாக்க தனியாகக் குழுவை அமைத்துள்ள தமிழ்நாடு அரசின் சிறப்பான நடவடிக்கைக்கு நேர் எதிரான நடவடிக்கையாக 1 முதல் 8 வகுப்புகளுக்கு மாநில அளவில் ஒரே தேர்வு என்ற நடைமுறை உள்ளது.

தேசிய கல்விக் கொள்கை 2020ல் 3, 5, 8 ஆகிய வகுப்புக்களுக்கு பொதுத்தேர்வு நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. 3, 5, 8 வகுப்புக்களுக்கு பொதுத்தேர்வு என்பது இளம் சிறார்களின் நெஞ்சங்களில் தேர்வு பயத்தையும், உளவியல் ரீதியாகக் குழந்தைகளின் மனநிலையைப் பாதிப்பதாகவும், குழந்தைகளின் இடைநிற்றலை **(Drop out)** அதிகரிக்கும் செயலாகவும் அமையும் என்பதால் கல்வியாளர்களும், உளவியல் நிபுணர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட சூழலில் தேசிய கல்விக் கொள்கை - 2020ஐ தமிழ்நாடு அரசு ஏற்காத நிலையில் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை 1 முதல் 8 வகுப்புக்களுக்கு மாநில அளவில் ஒரே தேர்வை நடத்துவது என்பது முரண்பாடாக உள்ளது. மேலும், தேசிய கல்விக் கொள்கை - 2020ன் கூறுகளை தமிழ்நாட்டில் வேகமாக அமல்படுத்துவதாகவும் உள்ளது. 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஏதோ **NEET, SLET, NET** போன்ற தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளை நடத்துவதைப் போல விதிமுறைகளை அறிவிப்பது என்பது எவ்விதத்திலும் பொருத்தமானதாக இல்லை. உலகில் கல்வியில் முன்னேறிய எந்தவொரு நாட்டிலும் 1 முதல் 8 வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு பொதுத்தேர்வு அல்லது மாநில அளவிலான தேர்வு என்ற நடைமுறை இல்லை.

கல்வி என்பது குழந்தைகள் சுதந்திரமாகக் கற்பதையும், சுதந்திரமாகச் சிந்திப்பதையும் உறுதிப்படுத்துவதோடு, குழந்தையை மையமாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். தேர்வை மையப்படுத்தி குழந்தைகளின் கல்வி அமையக்கூடாது என்பதை புகழ்பெற்ற கல்வியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். எனவே, தாங்கள் இவ்விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு 2023-2024 ஆம் கல்வியாண்டில் இரண்டாம் பருவத்தேர்வில் 1 முதல் 8ஆம் வகுப்புக்கு மாநில அளவில் தேர்வு என்ற நடைமுறையை ரத்து செய்திடவும், கடந்த காலங்களில் தமிழ்நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டவாறு 1 முதல் 8 வகுப்புக்களுக்கு பள்ளிகள் அளவில் ஆசிரியர்களே வினாத்தாட்களைத் தயாரித்து தேர்வு எழுதும் நடைமுறையை மீண்டும் செயல்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவிட தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில அமைப்பின் சார்பில் தங்களை வேண்டுகிறோம்.

மேலும், 1 முதல் 5ஆம் வகுப்புகளுக்கான இரண்டாம் பருவத் தேர்வுக்கான பொது வினாத்தாட்களை ஆரம்பப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஒவ்வொரு தேர்வுக்கு முந்தைய நாளும் அருகில் உள்ள நடுநிலைப் பள்ளிகளுக்குச் சென்று அங்குள்ள கணினியில் பதிவிறக்கம் செய்து நகலெடுக்க வேண்டும் என்று கல்வித்துறை அலுவலர்கள் வாய்மொழியாக அல்லது சமூக வலைத்தளங்கள் வழியாக தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவித்து வரும் செய்திகள் எவ்விதத்திலும் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகும்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் சராசரியாக 100 ஆரம்பப்பள்ளிகளும், 10 நடுநிலைப் பள்ளிகளும் உள்ளன. 10 ஆரம்பப்பள்ளிகளுக்கு வினாத்தாட்களை ஒரே நேரத்தில் பதிவிறக்கம் செய்து நகலெடுத்துக்கொடுக்கும் வசதி நடுநிலைப் பள்ளிகளில் இல்லை.

நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகள், பிரிண்டர்கள் அந்த அளவுக்கு தகுதி வாய்ந்தவைகளாகவும் இல்லை. மேலும், 10 பள்ளிகளுக்கு வினாத்தாட்களை நகலெடுத்துக் கொடுக்க ஆகும் செலவை யார் தருவது என்ற கேள்விக்கும் விடை இல்லை. மொத்தத்தில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை மாநில அளவிலான தேர்வு என்பது பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 2014ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் தொடக்கக்கல்வித்துறையில் ஆசிரியர் நியமனமே இல்லாத சூழலில், ஆயிரக்கணக்கான ஆரம்பப்பள்ளிகளில் ஓராசிரியர் மட்டுமே பணியாற்றும் சூழலில், 1 முதல் 5 வகுப்புக்களுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் என்பது ஆசிரியர்கள் மத்தியில் மிகப்பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 1 முதல் 8 வகுப்புகளுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் என்று அறிவித்துள்ள பள்ளிக்கல்வித்துறை அந்த வினாத்தாட்களை அச்சிட்டுப் பள்ளிகளுக்கு வாழங்கிட ஏன் முன் வரவில்லை என்ற கேள்வியும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் எழுந்துள்ளது. கல்வி உரிமை சட்டம் - 2009ன் படி 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை "அனைவரும் தேர்ச்சி" என்று உள்ள நிலையில் 1 முதல் 8 வகுப்புக்களுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் மூலம் தேர்வு என்பது அவசியமற்றதாகும்.

எனவே, தாங்கள் 1 முதல் 8 வகுப்புக்களுக்கு மாநில அளவில் பொது வினாத்தாள் என்பதை ரத்து செய்திடவும் பள்ளிக்கல்வித்துறை தேசிய கல்விக் கொள்கை - 2020ஐ பின்பற்றி தேர்வு நடத்துவதைத் தடுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவிட வேண்டுமாய் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில அமைப்பின் சார்பில் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

சென்னை (ச.மயில்)
11.12.2023 பொதுச்செயலாளர்

நகல்:

1. மாண்புமிகு.பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள்
   தலைமைச் செயலகம்
   சென்னை - 9
2. மதிப்புமிகு.பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள்
   பள்ளிக்கல்வி இயக்ககம்
   கல்லூரிச்சாலை
   சென்னை - 6
3. மதிப்புமிகு.தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்கள்
   தொடக்கக்கல்வி இயக்ககம்
   கல்லூரிச்சாலை
   சென்னை - 6
4. மதிப்புமிகு.இயக்குநர் அவர்கள்
   மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்
   கல்லூரிச்சாலை
   சென்னை - 6